தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

விகாரி, ஆனி 13, திருவள்ளுவர் ஆண்டு 2050

2019 ஜூன் 28, வெள்ளிக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. ப. தனபால் அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"உறங்கு வதுபோலும் சாக்காடு; உறங்கி
விழிப்பு போலும் பிறப்பு."

இறப்பு என்பது ஒருவருக்கு உறங்குவதைப் போன்றது. பிறப்பு எனப்படுவது அவர் உறக்கம் நீங்கி விழித்துக்கொள்வதைப் போன்றது.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

1. இரங்கற்குறிப்புகள்

முன்னாள் உறுப்பினர்கள் திரு. மா. சுந்தரதாஸ், திருமதி கே. பஞ்சவர்ணம், திரு. ஏ. சுப்பிரமணியம், திரு. ந. செல்வராஜ், திரு. ஏ.கே.சி சுந்தரவேல், திரு. மு. இராமநாதன், திரு. பொ. முனுசாமி மற்றும் திரு. சா. சிவசுப்பிரமணியன் ஆகியோர் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினர்களான திரு. மா. சுந்தரதாஸ் அவர்கள் 21–2–2019 அன்றும், திருமதி கே. பஞ்சவர்ணம் அவர்கள் 15–3–2019 அன்றும், திரு. ஏ. சுப்பிரமணியம் அவர்கள் 20–3–2019 அன்றும், திரு. ந. செல்வராஜ் அவர்கள் 26–3–2019 அன்றும், திரு. ஏ.கே.சி. சுந்தரவேல் அவர்கள் 6–4–2019 அன்றும், திரு. மு. இராமநாதன் அவர்கள் 9–5–2019 அன்றும், திரு. பொ. முனுசாமி அவர்கள் 18–5–2019 அன்றும் மற்றும்*

[பேரவைத் தலைவர்] [2019 ஜூன் 28

திரு. சா. சிவசுப்பிரமணியன் அவர்கள் 14–6–2019 அன்றும் மறைவுற்ற செய்தியினை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மா. சுந்தரதாஸ் அவர்கள் 1985–1988, 1989–1991 மற்றும் 1991–1996 ஆகிய ஆண்டுகளில் விளவங்கோடு தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு பாராட்டத்தக்க வகையில் பணியாற்றினார்கள்.

திருமதி கே. பஞ்சவர்ணம் அவர்கள் 1991–1996 ஆம் ஆண்டுகளில் வலங்கைமான் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றினார்கள்.

திரு. ஏ. சுப்பிரமணியம் அவர்கள் 1971–1976 ஆம் ஆண்டுகளில் சிங்காநல்லூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு திறம்பட பணியாற்றினார்கள்.

திரு. ந. செல்வராஜ் அவர்கள் 2006–2011 ஆம் ஆண்டுகளில் முசிறி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு அமைச்சராக சிறப்புறப் பணியாற்றினார்கள். மேலும், 1980–1984 ஆம் ஆண்டுகளில் மக்களவை உறுப்பினராகவும் பணியாற்றியுள்ளார்கள்.

திரு. ஏ.கே.சி. சுந்தரவேல் அவர்கள் 1991–1996 ஆம் ஆண்டுகளில் திருப்பத்தூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சீரிய முறையில் பணியாற்றினார்கள்.

திரு. மு. இராமநாதன் அவர்கள் 1985–1986 மற்றும் 1989–1991 ஆகிய ஆண்டுகளில் கோயம்புத்தூர் மேற்கு தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நன்கு பணியாற்றினார்கள். மேலும், 1970–1976 ஆம் ஆண்டுகளில் தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும், 1996–1997 ஆம் ஆண்டுகளில் மக்களவை உறுப்பினராகவும் பணியாற்றியுள்ளார்கள்.

திரு. பொ. முனுசாமி அவர்கள் 1977–1980 ஆம் ஆண்டுகளில் வந்தவாசி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு செவ்வனே பணியாற்றினார்கள்.

திரு. சா. சிவசுப்பிரமணியன் அவர்கள் 1989–1991 ஆம்

ஆண்டுகளில் ஆண்டிமடம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றினார்கள். மேலும், 1998–2004 ஆம் ஆண்டுகளில் மாநிலங்களவை உறுப்பினராகவும் பணியாற்றியுள்ளார்கள்.

இம்முன்னாள் உறுப்பினர்களது மறைவால் அவர்களைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

முற்பகல் 10–05

2. இரங்கல் தீர்மானங்கள்

(அ) திரு. ஆர். கனகராஜ், சட்டமன்றப் பேரவை உறுப்பினர் அவர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *கோயம்புத்தூர் மாவட்டம், சூலூர் தொகுதியிலிருந்து 2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவரும், அன்புடன் பழகும் பண்பும், திறம்படப் பணியாற்றும் பாங்கும் கொண்டு, அனைத்துத் தரப்பு மக்களின் அன்பைப் பெற்றவரும், சாதாரண தொண்டராக இருந்து, படிப்படியாக பல்வேறு பொறுப்புகளை வகித்து, சட்டமன்ற உறுப்பினராகி, பொது வாழ்வில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவருமான திரு. ஆர். கனகராஜ் அவர்கள் உடல்நலக் குறைவால் 21–3–2019 அன்று மறைவுற்ற செய்தியறிந்து இப்பேரவை அதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.*

அன்னாரது மறைவால் அவரை இழந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் இப்பேரவை தெரிவித்துக்கொள்கிறது.